1978 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இரண்டு ரூபாயாக இருந்ததை மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள்தான் ஐந்து ரூபாயாக ஆக்கினார்கள். 1972-ல் ரூ. 2½ என்றிருந்தது 1974-ல் ரூ. 5 ஆக ஆகியது. இப்போது ஒரு ரூபாய் குறைத்து இருக்கிறோம், அதற்கு அவர் பாராட்ட வேண்டும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பிரச்னை இப்போது வந்திருப்பதால் நாங்கள் இருந்தாலும் குறைத்திருப்போம். ஆகவே இப்போது அதைக் குறைக்க முடியுமா? (பதில் இல்லை.)

பம்பு செட்டுகளுக்கு மின்இணைப்பு

*வினா எண் 42—திரு. வெ. கருணாமூர்த்தி: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1974-75 ஆம் ஆண்டில், 60,000 விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க தமிழக அரசிடமிருந்து மின் வாரியத்திற்கு ஏதேனும் குறிப்பாணை அனுப்பப்பட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அரசிடமிருந்து ஆணை அனுப்ப வேண்டியதில்லை.

தமிழ்நாடு கூட்டுறவு இணையப் பணியாளர்கள்

*வினா எண் 43—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாடு கூட்டுறவு இணையத்திற்கும் அதன் ஊழியர் சங்கத்திற்கும் நடந்த ஒப்பந்தப்படி நிரந்தரமாக்கியதில் விடுபட்டுள்ளவர்களை 31—10—1977-க்குள் நிரந்தரமாக்கவும் 25—6—1977-லிருந்து பின் தேதியிட்டு ஊதியம் வழங்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கும் அதன் ஊழியர் சங்கத்திற்கும் கடந்த 17—5—1977 அன்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி தமிழ்நாடு கூட்டுறவு